සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**Department of Samurdhi Development**

මුදල් අමාත්‍යාංශය

සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා ඌණ උපයෝජන රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

நிதி அமைச்சு

**சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

Ministry of Finance

State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business Development and Underutilized State Resources Development


| මගේ අංකය<br>**எனது இல**<br>My No | DSD/HO6/EP/2/9/2022 | ඔබේ අංකය<br>**உமது இல**<br>Your No | ................................ | දිනය<br>**திகதி**<br>Date | 2022.03.04 |
|---|---|---|---|---|---|

சகல மாவட்ட செயலாளர்கள்/ மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல மாவட்ட சமுரத்தி பிரதி/ உதவிப் பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல தலைமைத்துவ, வங்கிச் சங்க, சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள்,
சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு,

**<u>“சமுர்த்தி அபிமாணீ ” விற்பனைக் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் - 2022</u>**

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் மூலம் “சமுர்த்தி அபிமானீ” விற்பனைக் கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தைகள் இவ்வாண்டின் தமிழ் சிங்கள புத்தாண்டினை அடிப்படையாகக் கொண்டு நடாத்த எண்ணியுள்ளது. அங்கு தங்களது மாவட்டத்தில் சமுர்த்தி வேலைத்திட்டத்துடன் தொடர்புபடுகின்ற தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு உள்ளகேள்விகள் மற்றும் விற்பனை வாய்ப்புக்களை விரிவாக்குவதும் அந்த உற்பத்திகளை மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் பிரசாரப்படுத்துவதும் விசேடமாக பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருட்களை சலுகை விலையில் மக்கள் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதனையும் நோக்காகக் கொண்டு நடாத்துவதற்கு கவனத்தினைச் செலுத்துவது அத்தியாவசியமானதாகும்.

மாவட்டத்தின் **<u>அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க அதிகார</u>** பிரதேசத்திலும் விற்பனைச் சந்தையொன்றினை ஒழுங்கு செய்ய வேண்டியதுடன் ஏப்ரல் மாதம் 07-10க்கு இடைப்பட்ட திகதியிலான காலப்பகுதியில் ஆகக்குறைந்தது இரு நாட்களிலாவது நடாத்துதல் வேண்டும். சமுர்த்தி வர்த்தகர் (சங்கம்) பிரதேச அமைப்புக்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புக்களினதும் முன்மொழிவுகள் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற பிரகாரம் நெறிப்படுத்தல் குழுவொன்றினை அமைத்து அதன் மூலம் சந்தையின் செயற்பாடுகளை ஒழுங்கு செய்வது தொடர்பில் தீர்மானிப்பது பொருத்தமானதாகும் என்பதுடன் கீழுள்ள விடயங்கள் தொடர்பில் தங்களது தயவுகூர்ந்த கவனத்தினைச் செலுத்துகின்றேன்.

I. விற்பனைக்கூடம், மின்சாரம், பிரச்சாரம் போன்ற அத்தியாவசிய செலவுகளின் பொருட்டு செலவிடக்கூடிய உச்சபட்ச எல்லையானது ரூபா 100,000.00 ஆகும் என்பதுடன் அச்செலவுகளை மேற்கொள்ளும் பொருட்டு “விற்பனைச் சந்தை சுழற்சி நிதியத்தை” பயன்படுத்த முடியும். ஏதேனும் ஒரு விதத்தில் அது போதுமானதாகாத விடத்து மேற்படி வரையறைகளுக்கு உட்பட்டதாக சமுர்த்தி வங்கிச் சங்க நிதியத்தினை பயன்படுத்த முடியும் என்பதுடன் இது தொடர்பான மேலதிக அறிவுரைகள் குறுநிதிப்பிரிவின் மூலம் தங்களுக்கு வழங்கப்படும்.


**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

II. வருமானம் ஒன்றினை உழைக்கக்கூடிய விதத்தில் வணிக ரீதியான விதத்தில் ஒழுங்கு செய்வது மிகப் பொருத்தமானதாகும் என்பதுடன் பிற வணிக மற்றும் வணிகமல்லாத வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுட்பட முதற்தர வர்த்தக நிறுவனங்களின் அனுசரனைகளையும் பெற்றுக்கொள்வது தொடர்பில் கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

III. இந்த விற்பனைச் சந்தையிலிருந்து கிடைக்கப்பெறும் சகல வருமானங்களும் ‘‘விற்பனைச் சந்தை சுழற்சி நிதியத்திற்கு’’ வரவிட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

IV. அரிசி, தேங்காய், போன்ற அத்தியாவசிய, நுகர்வுப் பொருட்களை சலுகை விலையில் மக்களுக்கு வழங்கும் வர்த்தகர்களுக்கு முன்னுரிமையினையும் வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதுடன் அதிகமான வர்த்தகர்களுக்கு கலந்துகொள்ளக்கூடிய விதத்தில் வேலைத்திட்டத்தினை ஒழுங்கு செய்தல் வேண்டும். அதே போன்று மாவட்டத்திற்குள்ளும் இது வரையில் ஆரம்பித்துள்ள மாதிரிக்கிராம/ கிராமங்களின் உற்பத்திகளிகளின் பொருட்டும் வாய்ப்புக்களை வழங்க விசேடமாக கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

V. இந்த சந்தையினை ஒழுங்கு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் ஒத்துழைப்பினை வழங்குதல் வேண்டும்.

VI. தமிழ் சிங்கள மக்கள் வாழாத பிரதேசங்களில் விற்பனைச் சந்தைகளை வெற்றிகரமாக நடாத்துவது தொடர்பில் சிக்கலான நிலைகள் இருப்பின் மாவட்டச் செயலாளர்கள்/ மேலதிக சமுர்த்திப் பணிப்பாளர் தலைமையதிபதிகளின் தலைமையில் அது தொடர்பில் தீர்மானங்களை மேற்கொண்டு சந்தைப்படுத்தல் பிரிவினை விளக்கமளித்தல் வேண்டும்.

VII. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமைக்காரியாலயத்தின் பங்கேற்பு மற்றும் ஒத்துழைப்பினை முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் வழங்க எண்ணியுள்ளதனால் விற்பனைச் சந்தைகள் நடைபெறும் திகதியும் தேவையான ஒத்துழைப்பு தொடர்பிலும் தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவினை விளக்கமளிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

VIII. கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தையின் இறுதியில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய பூர்த்தி செய்து துரிதமாக சந்தைப்படுத்தல் அபிவிருத்திப் பிரிவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆர்.பீ.பி.திலக்கசிரி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர்- சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில், மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு
2. மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி (வலுவூட்டல்) - த.கூ.க.பொருட்டு
3. பணிப்பாளர் (குறுநிதி) - த.கூ.க.பொருட்டும், உ.ந.பொருட்டும்
4. பணிப்பாளர் (வாழ்வாதாரம்) - த.கூ.க.பொருட்டும உ.ந.பொருட்டும்
5. உ. பணிப்பாளர் (சமுதாய அடிப்படை) - த.கூ.க.பொருட்டும் உ.ந.பொருட்டும்

**Translated By: - M.M.M. Jawhar (Translator)**
**Department of Samurdhi Development**

## சமுர்த்தி அபிமானீ- 2022
## விற்பனைக் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும்

**மாவட்டம் : ……………………………………………………**

**1. நடாத்தல்:**

| தொ. இல | சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் | நடாத்தப்பட்ட திகதி | இடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

**2. கலந்து கொண்ட வர்த்தகர்களின் எண்ணிக்கை:**

| தொ. இல | சமுதாய அடிப்படைவங்கிச் சங்கம் | உணவுபானங்கள் இனிப்புப் பண்டங்கள் | மரக்கறி மற்றும் பழவகைகள் | ஆடைகள் | கை வினைப் பொருட்கள் | அலங்கார தாவரங்கள் மற்றும் மலர்கள் | அரிசி மற்றும் தேங்காயுடன் அத்தியவசியப் பொருட்கள் விற்பனைகள் | ஏனையவை | அனுசரனை வழங்கும் வெளி நிறுவனங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | |

**3. நிதியச்சலுகைப் பெற்றுக்கொண்ட வழிகள்:**

| தொ. இல | சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் | விற்பனைச் சந்தை சுழற்சி நிதியம் ரூபா | பிற நிதியங்கள் ரூபா | மொத்த ரூபா |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

**4. மிகை**

| தொ. இல | சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் | வருமானம் | | மொத்த வருமானம் C=A+B ரூபா | மொத்த செலவு D ரூபா | திரும்ப சுழற்சி நிதியத்தில் வரவிட்ட அளவு D-C ரூபா |
|---|---|---|---|---|---|---|
| | | விற்பனைக் கூடம் வழங்குதல்கள் மூலம் A ரூபா | அனுசரனையாளர்களிடமிருந்து B ரூபா | | | |
| | | | | | | |
| | | | | | | |

**5. விற்பனைச் சந்தை ஒழுங்குகளின் போது ஏற்பட்ட பொதுவான தடைகளும் இடையூறுகளும்**

I. .

II. .

6. **பங்கேற்ற வர்த்தகர்களின் பிரேரணைகள்**
   I. .
   II. .
   III. .

7. **மொத்தமாக எடுத்துக்கொண்டால் சகல சந்தைகளும் (மிக வெற்றிகரமானது/ வெற்றிகரமானது/ பொதுவானது/ உத்தேசித்த மட்டத்தில் நடைபெறவில்லை)**

…………………………………………..
**தயாரித்தவர்.**

…………………………………………..
**பரீட்சித்தவர்.**

…………………………………………
**அங்கீகரித்தவர்**
**மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்.**